நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 625/2024

## D.W.1 –ன் வாக்குமூலம்

**(எதிரிதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | சூரப்பள்ளி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **DW1** |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜுன் மாதம், 24 –ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**இருதரப்பினரும் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–04.15 PM

1. நானும் புகார்தாரரும் ரியல் எஸ்டேட் தொழில் ஒன்றாக செய்து வந்ததற்காக ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த 1 வருடத்திற்கு முன்பாக எங்கள் இருவருக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது சம்மந்தமாக புகார் இரசீது எதுவும் நான் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான்.

2. மேற்படி புகாரில் காவல் நிலையத்தில் வைத்து எனக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று பைசல் செய்து வைத்து எழுதிக்கொடுத்ததாக நான் சொல்லும் ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கான காசோலை எனது அலுவலகத்தில் இருந்தததாக சொல்லும் அலுவலகம் இயங்கி வந்தது என்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.
3. என்னுடைய காசோலை காணாமல் போனதற்காக வங்கியில் Stop Payment கொடுத்ததற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் Joint Memo போட்டு ரூ.2,30,000/- ற்கு சமாதானம் பேசி முடித்ததாகவும் அதில் ரூ.30,000/- நான் செலுத்துவதாகவும் இந்த நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதை புகார்தாரர் என்னை மிரட்டியதால்தான் அவ்வாறு தாக்கல் செய்தேன்.
4. மேற்படி புகார்தாரர் உண்மையில் நான் சொன்னவாறு என்னை மிரட்டியிருந்தால் நீதிமன்றத்தில் அல்லது காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு முடிக்க வேண்டும் என்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் **பு.சா.ஆ.1 காசோலை** என்னுடையதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல.
5. மேற்படி காசோலையை நான்தான் புகார்தாரரிடம் கொடுத்துள்ளேன் என்றாலும் புகார்தாரரை ஏமாற்றும் எண்ணத்தில் வேண்டுமென்றே எனது கையெழுத்தை மாற்றி போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.
6. புகார்தாரருக்கு உண்மையில் நான் பணம் கொடுக்கவேண்டும் என்றாலும் அதனால்தான் புகார்தாரரிடம் ரூ.2,30,000/- ரூபாய்க்கு சமரசம் பேசி ரூ.30,000/- முன்பணமாக கொடுத்தேன் என்றாலும் தற்போது மாற்றி புகார்தாரர்தான் எனக்கு பணம் கொடுக்க வேண்டும் எனவும் காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 04.25 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**